# ★ மன்னாரில் பொலிஸார் சூடு; 5 தமிழர் பலி


விலை ரூபா 6-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஐப்பசி 9 இதழ் 264
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 26-10-1995


(கொழும்பு)
மன்னாரில் பொதுமக்கள் பயணம் செய்த பஸ் ஒன்றின் மீது பொலிஸார் சுட்டதில் ஐந்து அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் உயிரிழந்ததுடன் 13 பொதுமக்கள் படுகாயமடைந்ததாக பி.பி.ஸி தெரிவித்தது.

மரவைக் குளத்தில் பொலிஸார் சென்ற ஜீப் வண்டி

(2ம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கையால் நாலு லட்சம் மக்கள் இடம்பெயர்ந்தனர்

(கொழும்பு)
வலி கிழக்கில் தொடரும் யுத்தத்தால் 4 இலட்சத்து 10 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக ஆய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இத்தொகையானது யாழ்ப்பாண மக்கள் தொகையில் சுமார் 53 வீதமெனவும் கணிப்

(6ம் பக்கம் பார்க்க)

## யாழ். மீதான தாக்குதலில் 21,000 படையினர்

[கொழும்பு]
யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் முயற்சியில் 21 ஆயிரம் துருப்புகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இத்தாக்குதல் முயற்சியில் 40 ஆயிரம் துருப்புகள் தயார்

(6ம் பக்கம் பார்க்க)

# ★ விடுதலைப் புலிகள் நேற்று நீர்வேலி நோக்கி முன்னேறிய ராணுவம் மீது உக்கிர தாக்குதல்

## படையினருக்கு பலத்த இழப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியை நோக்கி கவச வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்கள் சகிதம் கடும் ஷெல் தாக்குதலை இடைவிடாது மேற்கொண்டவாறு பெரும் எடுப்பில் முன்னேறிய இராணுவ அணி மீது நேற்று விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை நடாத்தியதில் படையினருக்கு பலத்த இழப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்றுக் காலை முதல் மாலை வரை தொடர்ந்து இடம்பெற்ற இம் மோதலில் படையினர் தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது.

மிகக் கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டவாறு முன்னேற முயன்ற படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் கடும் எதிர்த் தாக்குதலை நடாத்தினர். இதன் போது இரு தரப்பிற்குமிடையே உக்

(5ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச சந்திரிகா மூன்று நிபந்தனை

(வாஷிங்டன்)
விடுதலைப் புலிகளுடன் எதிர்காலத்தில் பேச்சுக்களை நடாத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா மூன்று நிபந்தனைகளை விதித்துள்ளார்.

வாஷிங்டனில் நேற்று வைபவம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே இந்த மூன்று நிபந்தனைகளையும் தெரிவித்தார்.

முழுமையான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் கடைப்பிடித்தல், அரசு தற்போது முன் வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின் அடிப்படையில் பேச்சு, ஆயு

[5ம் பக்கம் பார்க்க]



### எதிர்காலம் என்ன?

இந்தச் சிறுவனின் பெயர் தனராஜ் திலீபன். ஐந்து வயதான இவன் தனது 31 வயது நிரம்பிய தாயாரான தனராஜ் செல்வராணியுடனும், 16 வயதான தனராஜ் சுரேசினியுடனும், 70 வயதான தாயின் தந்தை செல்லையா புண்ணியமூர்த்தியுடனும் தங்களது சொந்த இடமான பலாலி மீனவர் குடியிருப்பிலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து பருத்தித்துறையிலுள்ள வி. எம். ரோட்டில் வசித்து வந்தான். யுத்தத்துக்கு பயந்து இடம் பெயர்ந்தவர்களை யுத்தம் தொடர்ந்தது. 2-10-95 இரவு 11 30 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஏவுகணை இக்குடும்பம் வசித்த வீட்டில் வீழ்ந்தது. தாயும் பாட்டனும் கொல்லப்பட்டனர். சகோதரி படுகாயம் அடைந்துள்ளார். இச்சிறுவனது கை துண்டாடப்பட்டு அவலநிலையில் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறான் இவனதும் இவனைப் போன்ற ஊனமுற்றவர்களுக்கும் யார் வகை சொல்லப்போகிறார்கள். தானும் ஒரு தாய் என்று ஆகாயத்திலிருந்து போடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் கூறிய சந்திரிகா வகை சொல்லுவாரா? இவர்களின் எதிர்காலம் தான் என்ன?

## இலங்கையில் இராணுவத்தால் தமிழர் கொல்லப்படுவதை கண்டித்து தமிழகத்தில நேற்று உண்ணாவிரதம்

[சென்னை]
இலங்கையில் நடைபெறும் போரில் அப்பாவித் தமிழர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து நேற்று தமிழகத்தில் ஒருநாள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

மறுமலர்ச்சி தி. மு. க., தமிழர் இயக்கம், கோவை திராவிடர் கழகம், உலக தமிழின முன்னேற்ற கழகம், திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம், தமிழக தமிழ்ச் சங்கம் உட்பட பல பொது அமைப்புகளைச்

(5ம் பக்கம் பார்க்க)

## தமிழீழம் உருவாகுவதை இந்தியா 'அங்கீகரிக்க வேண்டும்

(சென்னை)
"தமிழீழத்தை" இந்திய மத்திய அரசு அங்கீகரிக்க வேண்டும். இந்திய மத்திய அரசு எக்காரணம் கொண்டும் இலங்கை அரசுக்கு உதவக்கூடாது. இலங்கையில் சிங்கள இராணுவம் தமிழ் மக்களை கொன்று குவிப்பதை உடன் நிறுத்த வேண்டும், போன்ற கோரிக்கைகளை முன்வைத்து நேற்று சென்னையில் திரைப்பட நடிகர் மன்சூர் அலிகான் தலைமையில்

(5ம் பக்கம் பார்க்க)

## இலங்கை பிரச்னைக்கு மத்தியஸ்தம்; ஏழு நாடுகள் முன்வருகின்றன

(கொழும்பு)
இலங்கையின் இனப்பிரச்னைக்கு தீர்வு காணும் முயற்சியில் மத்தியஸ்தம் வகிக்க ஏழு நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளதாக 'ராவய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, கனடா அவுஸ்திரேலியா, பிரிட்டன், நோர்வே, நெதர்லாந்து, சுவீடன் ஆகிய நாடுகள் இது பற்றி இலங்கை அரசாங்கத்துக்கு தங்கள் விருப்பங்களை தெரிவித்துள்ளன.

(5ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஆண்டு 3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L, A/L வழைய வினாத்தாள்கள் (Tutes 50 வீதம் தள்ளுபடி விலையில் விற்பனையாகின்றன, BOND யாழ்ப்பாணம். (ஏ-5382)

### வியாழமாற்றம்

உங்களுக்கு எப்படி? சோதிடர் V.A.சிவராசா, (வேலணை) 152 B அரசடி வீதி கந்தர்மடம் ஜாதகம் எழுத, விவாகப் பொருத்தம்பார்க்க, அதிர்ஷ்ட எண்களின் பெயரமைக்க உங்கள் எதிர்காலம் பற்றிச்சிந்திக்கும் நேரத்தில் சந்தித்துப்பாருங்கள். (ஜி 1716)

### விஷேச அன்ரனு

ரூபவாஹினி, மட்ருஸ் நிகழ்ச்சிகளுக்கு அன்ரனு பொருத்துவதற்கும் வீடியோ கமரா, ரி. வி. டெக். றேடியோக்கள், மணிக்கூடுகள் திருத்துவதற்கும் வீனஸ், டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி: Our Qualified Experienced Technical & Tutorial Staff T. Thanabalasingam B Sc. (Ceylon) Dip-in Electornic Engineering (Lond) (Specialist in V. C. R. Service) (ஏ-5388)


# 'தொலைக்காட்சியில் தெரிவது எமது கைங்கரியமே'

(கொழும்பு)

கொலன்னாவ எண்ணெய்க்குதத்தைத் தகர்த்த துப்பாக்கிநபர்கள் அருகிலிருந்த வீடொன்றினுள் ஒளித்த போது அங்கிருந்தவர்களிடம் தொலைக்காட்சியை போடுமாறு கூறி அதில் தெரியும் நேரடி ஒளிபரப்பானது தங்களால் மேற்கொள்ளப்பட்ட கைங்கரியமே எனக்கூறினார்களாம்.

இதுபற்றி தெரியவருவதாவது: கொலன்னாவ குதத்தைத் தகர்த்த இவர்களில் சிலர் தப்பியோடி அருகிலிருந்தவீடொன்றினுள் நுழைந்தனர். அப்போது அங்கிருந்தவர்களை, நீங்கள் தமிழர்களா சிங்களவர்களா எனக்கேட்டனர்.

தாங்கள் முஸ்லிம்கள் என அவர்கள் கூறிய போது தொலைக்காட்சியை போடுமாறுகூறினார்களாம். தொலைக்காட்சி போடப்பட்டபோது அதில் எண்ணெய்க்குதம் தீப்பற்றி எரியும் காட்சியைக்காண்பிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. உடனே அங்கிருந்தவர்களிடம், நீங்கள் தற்போது பார்ப்பது எமது கைங்கரியமே' எனக் கூறிவிட்டுச்சென்று விட்டார்களாம். -சி

# 12 பேரைப் பிடிக்க கொழும்பில் தீவிர தேடுதல்

(கொழும்பு)

எண்ணெய்க் குதங்களைத் தகர்த்துவிட்டு தப்பியவர்களில் 12 பேரைப் பிடிக்க கொழும்பு நகரெங்கும் தற்போது தீவிர தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது.

இத்தாக்குதலில் 19 பேர் ஈடுபட்டனர், இதில் தற்கொலைப்படையாளியான ஒருவர் கொலன்னாவ எண்ணெய்க் குதப் பகுதியில் தாக்குதல் நடத்தியபோது இறந்தார். மற்றும் இருவர் படையினரின் சூட்டுக்கு பலியானார்கள். நால்வர் படையினரிடம் பிடிபட்டனர். மிகுதி 12 பேரும் வான் ஒன்றில் தப்பிவிட்டனராம்.

தற்போது இவர்கள் கொழும்பு நகரத்தை விட்டுத் தப்பியிருக்கவேண்டும் அல்லது கொழும்பில் எங்காவது பாதுகாப்பாக இருக்கக்கூடுமென பொலிசார் கருதுகின்றனராம். -சி

# கொழும்பில் புலிகள்

## கெரில்லாத் தாக்குதல் நடத்தலாம்

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் புலிகள் கெரில்லா முறையிலான தாக்குதல்களை முக்கிய நபர்களுக்கு எதிராகவும் பொருளாதார இலக்குகள் மீதும் நடத்தலாம் என எதிர் பார்க்கப்படுகிறதாம்.

இதையடுத்து பலமுன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனினும் புலிகள் கெரில்லா தாக்குதல்களை எப்படியாவது நடத்திவிடுவார்கள் என்ற அச்சமும் எழுந்துள்ளதாம்.

முக்கிய தலைவர்களினதும் அரசியல் வாதிகளினதும், கேந்திர நிலைகளினதும் பாதுகாப்பு குறித்து விஷேட மாநாடொன்றும் நடாத்தப்பட்டுள்ளது. இதில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி

# பல்கலை அனுமதிக்கு மீண்டும் ஒரு பரீட்சை

(கொழும்பு)

க. பொ. த உயர்தர பாடவிதான மாற்றத்தின்படி பல்கலைக்கழக அனுமதிக்கென ஒரு பரீட்சை நடாத்தப்படும்.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கே இப்பரீட்சை நடத்தப்படும் இதன்படி அம் மாணவர்கள் பொது அறிவு பொது உளச்சார்பு போன்ற பாடங்களுக்கு விடையளிக்க வேண்டும்.

எனவே குறிப்பிட்ட பாடத்திட்டத்தை மட்டும் கற்றல் போதாது மாணவர்கள் பரந்துபட்ட அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் ஆசிரியர்களும் நடைமுறை மாற்றங்களைக் கற்று அறிவை வளர்த்து மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும். என கிழக்குப்பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் மனோ சபாரட்னம் தெரிவித்துள்ளார். ச-

# திருமலையில் மசகு எண்ணெயை களஞ்சியப்படுத்தத் திட்டம்

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் இறக்கப்பட்டுள்ள மசகு எண்ணெயை திருகோணமலையில் களஞ்சியப்படுத்துவது குறித்து அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

30 நாட்களுக்குத் தேவையான மசகுஎண்ணெ கொழும்பு துறைமுகத்தில் இறக்கப்பட்டுள்ளது. வழமையாக இவற்றைக் களஞ்சியப்படுத்தும் கொலன்னாவை, உறுகொடவத்த குதங்கள் தகர்க்கப்பட்டதால் இதை எங்கே களஞ்சியப்படுத்துவது என்ற பிரச்சினை எழுந்துள்ளது.

திருகோணமலையில் பாவிக்கப்படாத நிலையிலிருக்கும் எண்ணெய்க் குதங்களில் இவற்றைக் களஞ்சியப்படுத்துவது குறித்துத் தற்போது தீவிரமாக ஆராயப்பட்டு வருகிறதாம். சி

# உயிரிழந்த நபரிடமிருந்து சங்கேத எண்கள் மீட்பு

(கொழும்பு)

கொலன்னாவையில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தின்போது படையினருடனான மோதலில் உயிரிழந்த துப்பாக்கி நபருக்கருகிலிருந்து 19 சங்கேத எண்கள் மீட்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதன் மூலம் இத்தாக்குதலில் 20 பேர் வரை பங்குபற்றியிருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறதாம்.

மேலும் அவரின் சடலத்தின் அருகிலிருந்து 3,500 ரூபா பணமும் கனடாவில் வாழும் தமிழர் ஒருவரது விலாசமும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இத்தாக்குதலை இரு குழுவாக துப்பாக்கி நபர்கள் நன்கு திட்டமிட்டு மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

# கடற்படை சிப்பாய் துப்பாக்கி சூட்டில் பலி

(கொழும்பு)

புத்தளத்தில் கடற்படைச் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் கடற்படை சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

இரவு வேளையில் கடல் ரோந்தில் ஈடுபட்ட வேளையிலே இத்துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது. இதன்போது அந்த கடற்படை சிப்பாய் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

இந்த சிப்பாய் கடந்த இரு தினங்களுக்கு முன்தான் இந்த முகாமுக்கு மாற்றம் பெற்று வந்திருந்தார். க-சி

# போரை நிறுத்துமாறு சந்திரிகாவுக்கு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

போரை நிறுத்தி தமிழ் மக்களின் பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தை நடாத்தி பிரச்சினையை தீர்க்குமாறு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு சுவாமி சித்ருபானந்தா அவசர தந்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

அவர் தமது தந்தியில்; சமாதான சூழலை உருவாக்கி அனைவரையும் பாதுகாக்க வேண்டும். போதிய உணவு மருந்துகளின்றி மக்கள் தமது சாதாரண வாழ்க்கையை நடாத்த முடியாதுள்ளது. வீடுகளில் வசிப்பது பாதுகாப்பற்றது என அப்பாவி மக்கள் கருதுகின்றனர்.

புத்தபெருமானின் போதனைகள் சிறந்தவை. அதன்படி நடந்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துங்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார். சி


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

இசைமாணி/ நாட்டிய மாணி, இசைக்கலைமணி /நாட்டியக் கலை மணி 1994/95

மேற்குறித்த கற்கை நெறிகளுக்கான அனுமதிச் செய்முறை, நேர்முகப் பரீட்சைகள் 3 - 11 - 95லிருந்து 13 - 11 - 95 வரை யாழ். பல்கலைக்கழகக் கலையரங்கில் நடைபெறவுள்ளன. தகுதியுடைய மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் யாழ். பல்கலைக்கழகத் தேர்வுகள் அனுமதிகள் பிரதிப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1995-10-20. (ஏ 5418)



உ

## நூல் அறிமுக விழா

இடம்: யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி விவேகானந்த மண்டபம்

காலம்: 27-10-1995 வெள்ளிக்கிழமை காலை 11-30 மணி

தலைவர்: திரு. து. சந்தோஷம் (அதிபர்)

அன்னை ஸ்ரீ சாரதாதேவி விரிவான வாழ்க்கை வரலாறு

சுவாமி ஆசுதோஷானந்தர்

வெளியிடுபவர்:

தலைவர்

ஸ்ரீராம கிருஷ்ணமடம்

மயிலாப்பூர், சென்னை 600004

நூல் அறிமுகஉரை

சுவாமி சித்ருபானந்தா

(செயலாளர் ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம் பருத்தித்துறை)

''உங்கள் உள்ளத்தைப் புனிதப்படுத்தவிரும்புவீர்களானால் அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் புனிதப்பெரு வாழ்வையும் அவரது மகிமையையும் சிந்தியுங்கள். அதைவிடச் சிறந்த சாதனம் வேறொன்றில்லை'' என்று எழுதினார் தற்காலத்தின் தலைசிறந்த சிந்தனையாளர்களுள் ஒருவரான டி. எம். பி. மகாதேவன். ஒரு பெண்ணின் வாழ்க்கை எத்தகைய உன்னத நிலையை எட்ட முடியும் என்பதற்கு, அன்னையின் வாழ்க்கை ஒரு சிறந்த உதாரணமாகும். (ஏ-5419)


# பாணுக்கான தட்டுப்பாடு சில வாரங்களில் நீங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் பாணுக்கு தற்போது ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாடு அடுத்த சில வாரங்களில் முற்றாக நீங்குமென்று யாழ். செயலக வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

யாழ்ப்பாணம், நல்லூர் போன்ற பகுதிகளிலுள்ள வெதுப்பகங்களுக்கு அடுத்த வாரம் முதல் கூடுதலான மா வழங்கப்படவுள்ளது.

இதனையடுத்து இப்பகுதியில் பாணுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாடு முழுமையாக நீங்குமென்றும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.-170

## மன்னாரில்

(1ம் பக்க தொடர்ச்சி)

ஒன்று கண்ணி வெடியில் சிக்கி மூன்று பொலிஸார் காயமடைந்த பின்பே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச்சம்பவத்தை அறிந்து அந்த இடத்துக்கு வந்த வேறுபொலிஸாரே பழிவாங்கும் நோக்கில் பஸ்ஸில் வந்த பொதுமக்களை சுட்டுக் கொன்றனர்.

எனினும் இது குறித்து தகவல் எதனையும் அரசு வெளியிடவில்லை எனவும் பி. பி. ஸி தெரிவித்தது. ம-சி


## நிர்வாகசபைக் கூட்டம்

(அரியாலை)

யாழ் - மாவட்ட வணிகர் கழகங்களின் இணையத்தின் மாதாந்த நிர்வாகச் சபைக் கூட்டம் ஒன்று இணையத்தின் பணிமனையில் நாளை 27ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறவுள்ளது. 59

**மணிவாக்கு**

கற்க வேண்டிய நூல்களைக் கற்று உனது அறியாமையை நீக்கிக்கொள். - ஆத்திசூடி

# நமது நோக்கு

## ரத்வத்தையின் பொய்கள்

ஜனாதிபதி சந்திரிகா வெளிநாட்டு சுற்றுலாவில் ஈடுபட்டிருக்கையில் நாட்டின் அரசியல் அதிகாரம் வெளித்தோற்றத்திற்கு சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கையில் இருப்பதுபோல தோன்றினாலும் உண்மையில் அது அநுருத்த ரத்வத்தையின் கையில்தான் உள்ளது. அவரது பேச்சுக்களும் அதையே எடுத்துக் காட்டுகிறது. ஜனாதிபதி சந்திரிகா கொலன்னாவ விபத்துக்களையடுத்து நாடு திரும்ப விரும்பியதாகவும் அதற்குத்தான் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியுமென்று உறுதி அளித்ததாகவும், அன்று அதிகாலை 2-30 மணிக்கு பாதுகாப்புச் சபையை தனது இல்லத்தில் கூட்டியதாகவும் தேவையான கட்டளைகள் உடனடியாகப் பிறப்பிக்கப்பட்டன என்றெல்லாம் கூறுகிறார்.

இவருக்கு இவ்வளவு முக்கியத்துவம் எதனால் வந்தது? நடந்து கொண்டிருக்கும் யுத்தம்தான் அவரின் முக்கியத்துவத்துக்குக் காரணம். அதனால்தான் அதாவது தனது முக்கியத்துவத்தை தக்கவைப்பதற்காகத்தான் அவர் இராணுவத் தீர்வுக்கு முதன்மையையும் தீவிரத்தையும் கொடுக்கிறார். இப்போது யுத்தம் இக்கட்டான உச்சநிலைக்கு வந்துள்ளது. அப்படியான நேரத்தில் மற்றைய அமைச்சர்கள் யுத்த விடயங்களில் தலையிடமாட்டார்கள். ஆகவே ரத்வத்தை தனிக்காட்டு இராசாவாக விளங்குகிறார். இந்த நிலை எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும்!

ஆனால் ரத்வத்தை நிலைமைகளைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ளாரா? கொலன்னாவ, உறுகொடவத்தை எண்ணெய்க் குதங்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து கொழும்பு நகர் இன்னமும் வழமைக்குத் திரும்பவில்லை. பிரதான பாதைகள் பலவற்றில் தடைகள் போடப்பட்டு சோதனைகள் நடைபெறுவதாலும் எண்ணெய்க்குதங்களில் பற்றியுள்ள தீ இன்னமும் முற்றாக அணைக்கப்படாததாலும், வாகனங்களுக்கு எரிபொருள் தட்டுப்பாடுள்ளதாலும், கொழும்பில் போக்குவரத்தும் சனப்புழக்கமும் இயல்பு நிலையை எட்டவில்லை.

பொருளாதார ரீதியாக கொலன்னாவ எண்ணெய்க்களஞ்சிய பெறுமதி அளவிட முடியாதது. ஏனெனில் நாடு முழுவதற்கும் தேவையான முழு டீசல், பெற்றோல், மண்ணெண்ணெ, பெற்றோலிய வாயு ஆகியன அங்குதான் சேமிக்கப்பட்டிருந்தது. தாக்குதலின் நோக்கமும் நாட்டின் எண்ணெய்ச் சேமிப்பை அழித்து விமானங்கள், இராணுவ வாகனங்கள், கடற்படைக் கப்பல்கள் என்பனவற்றிற்கான எரிபொருள் விநியோகத்தைத் தடைப்படுத்தி அவற்றின் நகர்வைக் கட்டுப்படுத்துவதேயாகும். எண்ணெய்க்குதங்களின் மீதான தாக்குதல் நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் இழப்பை ஏற்படுத்தியுள்ளதால் 1996ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டமே முழுமையாக மாற்றம் செய்யப்பட்டு பாரிய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது.

ஆனால் ரத்வத்தையோ போதிய அளவு பெற்றோலியப் பொருட்கள் இருப்பில் இருக்கின்றதென்றும் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்றும் விழுந்தவன் மீசையில் மண்படவில்லை என்று கூறுவதுபோல் பச்சைப்பொய்களைக் கூறுகிறார். அவரின் பொய்ப்பிரசாரங்களுக்கு செய்தித் தணிக்கை உதவி வருகிறது.

ரத்வத்தை நாட்டின் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறேன் என்று கூறும்போது எண்ணெய்க்குதத் தாக்குதலின்பின் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்ட பின்னரும் படையினருக்கும் பொலிசாருக்கும் எதிராக நடத்தப்பட்ட போருக்கு என்ன அர்த்தம். அப்போரில் இருபத்தியாறு படையினர் கொல்லப்பட்டுள்ளனர். தாக்கியவர்களில் இறந்தவர்களைத் தவிர ஏனையோர் தப்பிச் சென்றுள்ளனரே! அதற்கும் என்ன அர்த்தம்! கிழக்குப் போர் முனையில் படையினருக்கு ஏற்பட்ட அழிவுகளுக்கு யார் பொறுப்பு? அரச கட்டுப்பாட்டுக்குள் இருந்த பிரதேசங்கள் படிப்படியாக விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்படுவதற்குத்தான் என்ன அர்த்தம்!

வடக்குப் போர்முனையில் தூரநோக்கில்லாத ரத்வத்தையின் போரினால் நாளாந்தம் அதிகாரிகள் உட்பட படையினர் செத்துக் கொண்டிருக்கின்றனர். யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவேன் என்று மார்தட்டிக் கொண்டு ரத்வத்தை என்னத்தைச் செய்கிறார். தமிழ்மக்களின் நெஞ்சங்களை மேலும் இறுக்கமாக்குகிறார். பிரிவினைதான் என்ற முடிவை மேலும் முடிந்த முடிவாக்கப் பார்க்கிறார். சமாதானக் கதவுகளை இறுகப் பூட்டச் செய்கிறார். இவைதான் ரத்வத்தை நாட்டைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் திறன்.

# வாங்க, வாங்க என அழைத்து துப்பாக்கி நபர்கள் தாக்கினர்

(கொழும்பு)

கொலன்னாவ எண்ணெய்க்குதத்தைத் தாக்கிய துப்பாக்கி நபர்கள் அருகிலிருந்த பொலிஸ் நிலையத்திற்கு சென்று அங்கிருந்தவர்களை 'வாங்க, வாங்க, எனத் தமிழில் அழைத்து தாக்குதல் நடாத்தியுள்ளார்கள்.

எண்ணெய்க்குதம் தாக்கப்பட்ட பின்னர் இப்பகுதியில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக கடும் சண்டை நடைபெற்றுள்ளது.

பொலிஸ் நிலையத்தை துப்பாக்கி நபர்கள் தாக்கிய போது அங்கிருந்த பொலிஸார் பாதுகாப்புத் தேடி தப்பி ஓடினர் எனினும் இவர்கள் அவர்களை துரத்தி, துரத்தி தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

இதனையடுத்து அப்பகுதிக்கு விரைந்த அதிரடிப்படையினர் பல மீற்றர் தூரத்திற்கு அப்பால் 'வீதித் தடைகளை போட்டு சோதனை நடாத்திய போதும் தாக்குதலை நடாத்தியவர்கள் தப்பிச்சென்று விட்டார்களாம்.

இதன் பின்பே கொலன்னாவ தெமட்டகொட வீதியில் வைத்து ஆயுதங்கள், வெடிமருந்துகளுடன் சென்ற லொறியை பொலிஸார் வழிமறித்து சோதனையிட்டு அதனைப்பிடித்தார்களாம். -வி

# எண்ணெய்க்குத புனர்நிர்மாணம் அமெரிக்க நிபுணர்கள் வருகை

(கொழும்பு)

கொலன்னாவ எண்ணெய்க்குத புனர்நிர்மாண நடவடிக்கைக்காக 3 அமெரிக்க நிபுணர்கள் இலங்கை வரவுள்ளார்கள். இதில் ஒரு நிபுணர் ஏற்கனவே இலங்கைக்கு வந்து சேர்ந்து விட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை எண்ணெய்க்குத அழிவுக்கான நஷ்ட ஈடு வழங்குவதில் பிரச்சினை எழுந்துள்ளது.

இங்கு ஏற்பட்ட அழிவு தீவிரவாத தாக்குதலால்'' ஏற்பட்டதினால் நஷ்ட ஈடு கொடுப்பனவு பிரச்சினை எழுந்திருப்பதாக பெற்றோலிய கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொலன்னாவ எண்ணெய்க் களஞ்சிய தொகுதியில் 60 கோடி ரூபாவிற்கும் உறுகொடவத்த எண்ணெ களஞ்சிய தொகுதியில் 40 கோடி ரூபாவுக்கும் நஷ்டமேற்பட்டிருப்பதாக பூர்வாங்க மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. கே-சி

# கஷ்டப் பிரதேச ஆசிரியர்க்கு அலவன்ஸ் வழங்கப்படும்

(கொழும்பு)

கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றிவரும் ஆசிரியர்களுக்கு அதற்குரிய நிவாரணத்தொகை (அலவன்ஸ்) வழங்கப்படவுள்ளது.

இவ்வாறான பிரதேசங்களுக்கு மாற்றலாகும் பண வசதி செல்வாக்கு மிக்க ஆசிரியர்கள் சிலர் வெகு விரைவிலேயே வேறு வசதியான இடங்களுக்கு மாற்றம் பெற்றுச் செல்கின்றனர். இதேவேளை சமுதாயப்பற்றும் கடமை நோக்கும் கொண்ட ஆசிரியர்கள் பலர் கஷ்டபிரதேசங்களில் தமக்கு வழங்கப்பட்ட மாற்றத்தை ஏற்றுக் கொண்டு சேவை ஆற்றி வருகின்றனர். இவர்களைக் கருத்திற்கொண்டே இவ் விசேட அலவன்ஸ் வழங்குவதெனவும் அரசு முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தீ-ஓ

# போலியோ தடுப்பு மருந்து வழங்குவதில் கவனம் செலுத்துக

(யாழ்ப்பாணம்)

முகாம்களிலும் பொது இடங்களிலும் தங்கி இருக்கும் மக்கள் ஐந்து வயதுக்கு உட்பட்ட தமது குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு மருந்து வழங்குவதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமென சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர்

(4ம் பக்கம் பார்க்க)

# இராசி பலன்

**26-10-1995**

**வியாழக்கிழமை**

[தமிழுக்கு ஐப்பசி 09]

துதியை காலை 7-20 வரை; திருதியை வைகறை 5-13 வரை; விசாகம் மு. ப. 9-26 வரை; சித்தயோகம் இராகு காலம் பி. ப. 1.32 முதல் 5-03 வரை, சுபவேளை காலை 7-33 முதல் 9-03 வரை.

மேடம்- கடின வேலை, அமைதிக் குறைவு, இலட்சிய வெறி.

இடபம்- மனத் தெளிவு, வாக்கு வசீகரம், தொழில் சிறப்பு

மிதுனம்- நல்லோர் நட்பு, குடும்பச் சிறப்பு, பயணம்.

கடகம்- கருத்து மோதல், கடும் சினம், அலைச்சல்.

சிம்மம்- சபல புத்தி, இனம் புரியாத கவலை, பணமுடை

கன்னி- அயலவர் உதவி, காரிய சித்தி தானதர்மம்.

துலாம்- முதியோர் கண்டனம் மனைவி துயர் தனிமைப் படல்.

விருச்சிகம்- வேண்டாத உறவு, முயற்சி பலிதம். நாணயம் காத்தல்.

தனுசு- துரோகமிழைத்தல் புத்திரர் நேயம் தொழில் மந்தம்

மகரம்- சயன சுகம் சுப காரியச் செலவு மறைமுக உறவு

கும்பம்- நியாயம் கற்பித்தல் தொழில் லாபம் தெய்வ சிந்தனை.

மீனம்- மனப்போராட்டம், தாழ்வுச் சிக்கல் கடன்சுமை

— ஜோஸ்யர்

# இளைஞனே இன்னும் ஏன் தயக்கம்?!

இளைஞனே இன்னு(ம்)மா!
இந்த—
மண்ணில் - பாசம்
எழவில்லை(யா) - ?
நேசம் உனக்கில்லை(யே)யா!?

★

இளைஞனே இன்னுமா!
இந்த—
ஊரைச்—
சுற்றிச் சுற்றி
மாலை வேளைகளில்
மனதுக் கினிமையாய்
க(ழி)ளிக்கின்றாய்!

★

இளைஞனே இன்னுமா!
இந்த—
இரக்கமற்ற இராணுவத்தின்
இழிநிலை—
புரியவில்லை.

★

இளைஞனே இன்னுமா!
இறுகப் பிடிக்கின்றாய்
உன்—
பந்த - பாசங்களை;

★

இளைஞனே இன்னுமா!
இராணுவம்
உன் - ஊரில்
புகுந்தால்—
உன்—
காதலி - கற்பு
மட்டுமல்ல—
அக்கா தங்கை—
கற்பும் - தான்
களங்கமுறும்
என்று
உனக்குப்—
புரியவில்லை(யே)யா - ?

★

இளைஞனே இன்னுமா!
இங்கு—
ஷெல்லடியால்—
நாளும் அகதிகளாய்—
நடை பயிலுகின்ற—
பச்சிளம் பாலகரும்
தளர் நடை—
முதியோரும்—
உன்—
கண்ணில்-படவில்லை(யா)?
உன் - நெஞ்சை—
தொடவில்லை(யா)?

★

இளைஞனே—
இது - குந்தியிருந்து
வம்பளக்கும்—
நேரமல்ல
வெள்ளம் - வருமுன்
அணை கட்ட—
அணி அணியாய்—
திரண்டு - வா
எதிரிப் படை—
விரண்டோடும்.

— மந்துவிலூர் சிவா

# மரபு வழியான பாரிய தாக்குதலை யாழ். குடாவில் நடத்தவேண்டாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்: குடாவில் அரச படைகள் மரபு வழியான பாரிய தாக்குதல் நடாத்துவதை உடனடியாகக் கை விட்டு, கெரில்லா முறைப் போரையே நடாத்தவேண்டும் என 'சண்டே டைம்ஸ்' இக்பால் அத்தாஸ் கூறியுள்ளார்.

அவர் இது பற்றி மேலும் கூறுகையில்: மரபுவழி முறையிலான பாரிய யுத்தத்தினுல் தமிழ்மக்களை நிரந்தரமாகப் பகைக்க வேண்டியநிலை ஏற்படும். அங்கிருப்போர் எல்லோரும் தமிழர்கள். அப் பகுதிகளைப் படையினர் கைப்பற்றினுலும் இனி அங்கு இருக்கப் போகிறவர்களும் தமிழர்களே.

மரபு வழியான போரைப் படையினர் பாரிய அளவில் நடாத்துவதன் மூலம் அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்பட்டும், படுகாயமடைந்தும் சொத்துக்கள் அழிக்கப்பட்டும் வருகின்றன. குடிமக்கள் அடர்த்தியாக வாழும் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் இராணுவம் மரபுவழி முறையான பாரிய தாக்குதலை நடத்தக்கூடாது. இவ்வாறான தாக்குதலால் ஏற்படும் இழப்புக்களை மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்.

இதன் மூலம் அரசு தமிழ் மக்களின் உள்ளங்களை ஒருபோதும் வென்றெடுக்க முடியாது. பகையை மட்டுமே தேடமுடியும். தமிழ்மக்களின் உள்ளங்களை வெல்லாது புலிகளுடனுன போரிலும் அரசு வெற்றி பெறமுடியாது.

எனவே விடுதலைப் புலிகள் மேற்கொள்வது போன்ற சிறு சிறு தாக்குதல்களை கெரில்லா முறையில் நடாத்தவேண்டும். இராணுவத் தலைவர்கள் உடனடியாகத் தங்களது தாக்குதல் திட்டத்தை மாற்றி மரபு வழியாகவன்றி கெரில்லா போர் முறையைக் கடைப்பிடிக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். சி

## போலியோ ஒழிப்பு தினம்:

# 5 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் விபரம் திரட்டல்

(மானிப்பாய்)

போலியோ ஒழிப்பு தினத்தையொட்டி நவாலியில் 5 வயதிற்குட்பட்ட பிள்ளைகளின் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

நவாலி குடும்பநல சேவையாளரின் உதவியுடன் அதற்கென நியமிக்கப்பட்ட தொண்டர்கள் வீடு வீடாகச் சென்று பிறந்து 1 நாள் முதல் 60 மாதம் வரையுள்ள குழந்தைகளின் விபரங்களை திரட்டி வருகின்றனர்.

விபரங்கள் பெறப்பட்டு முடிந்ததும் எதிர்வரும் நவம்பர் 4ந் திகதி முதல் பின்வரும் இடங்களில் வைத்து போலியோ தடுப்பு மருந்து வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நவாலி வை.எம்.சி.எ நவாலி அரசடி மகா வித்தியாலயம், நவாலி அ.மி.பாடசாலை ஆனைக்கோட்டை பால சுப்பிரமணிய வித்தியாசாலை ஆகிய நிலையங்கள் இதற்கென ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

சகல பெற்றோர்களும் மேற்படி நிலையங்களுக்குச் சென்று தமது பிள்ளைகளுக்கு தடுப்பூசி ஏற்றிக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். 71-சி

## ஒய்வுபெற்ற தளபதிகளின் ஆலோசனையில்

# சண்சைன் தாக்குதல்தொடரும்

(கொழும்பு)

யாழ். குடாவில் நடைபெறும் ஒபரேஷன் 'சண்சைன்' தாக்குதல் குறித்து படையினருக்கு ஆலோசனை வழங்கவென ஓய்வுபெற்ற படைத் தளபதிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

இது குறித்து கடந்த சில தினங்களுக்கு முன் கூடிய பாதுகாப்புச் சவுன்சில் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. இவ்வாறு ஓய்வுபெற்ற தளபதிகளின் ஆலோசனையின் பேரில் 'சண்சைன்' தாக்குதலை முன்னெடுக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் இதுபற்றி அங்கு இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. இதேவேளை சண்சைன் தாக்குதலை முழு அளவில் தொடர்வது எனவும் இதற்கு தேவையான ஏற்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன. -சி

# கம்யூனிச கொள்கையை கியூபா கைவிடாது

(நியூயோர்க்)

கியூபா கம்யூனிஸக் கொள்கையை ஒருபோதும் கைவிடாது என கியூபாவின் அதிபர் பிடல் காஸ்ட்ரோ கூறியுள்ளார்.

ஐ.நாசபையின் 50வது ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்து கொள்ள நியூயோர்க்குக்கு வருகை தந்த பிடல் காஸ்ட்ரோ அந்நிகழ்வில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா கியூபாவின் மீது விதித்திருந்த பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட்டாலும் கியூபா அதன் கம்யூனிசக் கொள்கையை விட்டு விலகாது எனவும் திரு. காஸ்ட்ரோ கூறியுள்ளார். தீ-சி

★ தமிழ் ஈழப் பொருண்மிய நிறுவனத்தின்

## பசுமை வேளாண்மை செயல் திட்டத்துக்கு

# நீங்களும் ஒரு மரக்கன்றை நாட்டுங்கள்

★ உணவுக்காக பயன்படுவன'

தென்னை, பனை, பலா, அகத்தி, புளி

★ உணவு ஊட்டப் பெறுமதி வாய்ந்தன,

தோடை, எலுமிச்சை, மா, பப்பாசி, வாழை, இலுப்பை கொய்யா, மாதுளை

★ உணவு ஏற்றுமதிக்கு,

புளி, கமுகு, மரமுந்திரிகை

★ மருத்துவ பயன்பாட்டுக்கு.

கடுக்காய், வேம்பு, இலுப்பை, வில்வை

★ மரத்தளபாடங்களுக்கு

தேக்கு, முதிரை, பாலை, வீரை, மலைவேம்பு

★ மண்வள பாதுகாப்புக்கு

மூங்கில், காட்டு வில்வம், சீமைக்கிளுவை, சவுக்கு, முள்ளில்லாமுருக்கு, சைப்பிரஸ், கோணல்புளி

மரம் நடும் வாரம்
அக்டோபர் 26
முதல் நவம்பர் 01
வரை நினைவில்
நிறுத்துவோம்

★ கைத்தொழில் மூலப் பொருட்களுக்கு.

சூரியகாந்தி, யூகலிப்டஸ், (புலொத்தி) ஆமணக்கு, இலவு

மரம் நடுவோம், மழை பெறுவோம்: மண்வளத்தைக் காப்போம்: பலன் பெறுவோம்; சூழலைப்பாதுகாப்போம். — ஸச்சி

## பிரதேச சபை இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு நீர்வேலி பிரதேச சபை, நல்லூர் பிரதேச சபை திருநெல்வேலி கட்டிடத்தில் நேற்றுபுதன் கிழமை தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எனவே சகல உத்தியோகத்தர்களையும் நல்லூர் பிரதேச சபை அலுவலகத்திற்கு சமூகமளிக்குமாறு பிரதேச சபையின் செயலாளர் மு. க. குணபாலசிங்கம் கேட்டுள்ளார்.

## சைவ நெறித் தேர்வு

(கொழும்புத்துறை)

யாழ். சைவபரிபாலன சபையினரின் அகில இலங்கைச் சைவநெறித் தேர்வு எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

154-சி

## போலியோ

[3ம் பக்கத் தொடர்ச்சி]

வை ஸ்ரீகாந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேசிய நோய் தடுப்பு நாட்களான நவம்பர் 4ம் திகதி டிசம்பர் 9ம் திகதி ஆகிய தினங்களில் முகாம்களிலும் பொது இடங்களிலும் தஞ்சமடைந்திருக்கும் தாய்மார்கள் தமது பகுதிகளில் இதற்கென அமைக்கப்பட்டிருக்கும் இடங்களில் தமது குழந்தைகளுக்கான போலியோ தடுப்பு மருந்தைத் தவறாது கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

162-சி

## மரம் நாட்டி மண்ணின் வளம்

# பெருக்குவோம்

மண்ணின் வளமும் கொழுத்துச் செழிக்க
மரங்கள் நாட்டி வளர்த்திடுவோம் — எங்கும்
கண்ணுக் கினிய பசுமைப் புரட்சி
மலரக் கண்டு மகிழ்ந்திடுவோம்

மரங்கள் நாட்டிக் காத்து வளர்த்தால்
நிழலும் பெருகும் பயன்பெறுவோம் — எங்கும்
எரிக்கும் வெயிலின் வெப்பம் தணியும்
குளிர்ச்சி கண்டு சுகமடைவோம்

சாலை தோறும் மரங்கள் நாட்டி
அழகைப் பெருக்க முயன்றிடுவோம் — அவை
சோலை யாக்கும் காட்சி யோடு
மண்ணின் வளத்தைப் பெருக்கிடுவோம்

கனிகள் கொடுக்கும் மரங்கள் நாட்டி
வளர்த்துப் பயனை ஈட்டிடுவோம் — நாங்கள்
அனைத்துத் தரிசு நிலங்கள் எல்லாம்
வனங்கள் ஆக்கி வளர்த்திடுவோம்.

நாட்டின் வளத்தைப் பெருக்கும் செல்வம்
மரங்க ளென்ப தறிந்திடுவீர் — எங்கள்
கேட்டை யகற்றி நலனைக் காக்கும்
மருந்தா மதையு முணர்ந்திடுவீர்

மரங்கள் எங்கும் செழிக்க வளர்த்து
மாரி மழையைப் பெருக்கிடுவோம் — எங்கள்
காமும் தேய்ந்து உரமும் பெற்றால்
செல்வம் கொழிக்க வாழ்ந்திடலாம்.

—மாரீசன்

# வீட்டினுள் புகுந்து தங்கநகைகள் கொள்ளை

(கொழும்புத்துறை)

கொக்குவிலில் உள்ள ஒரு வீட்டினுள் பூட்டி வைக்கப்பட்டிருந்த பல ஆயிரம் ரூபா பெறுமதி மிக்க தங்க நகைகள் கடந்த மாதம் முற்பகுதியில் இனம் தெரியாத நபர்களால் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

இக் கொள்ளை கொக்குவில் மேற்கில் வசிக்கும் திருமதி ராஜேந்திரன் - விஜிதா என்பவரது வீட்டிலேயே நடைபெற்றுள்ளது.

சுமார் அறுபதாயிரம் ரூபா பெறுமதி மிக்க தங்க நகைகளும், இரண்டாயிரம் ரூபா ரொக்கப்பணமும் திருடர்களால் களவாடப்பட்டுள்ளது.

இத்திருட்டுப் பற்றி காவல் துறையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 154-சி

# முதன்மைஆசிரியர்பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(குருநகர்)

யாழ்: கல்வி வலயம் I லும், II லும் இயங்கும் கோட்டங்களிலுள்ள ஆங்கிலம், சமூகக் கல்வி, உடற் கல்வி: சித்திரம் கிறிஸ்தவம் (ரோ. க. அல்லாதது) ஆகிய பாடங்களுக்குரிய முதன்மைஆசிரியர் வெற்றிடங்களுக்கு தகுதியுள்ள ஆசிரியர்கள் 01-11-95க்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை தமது பாடசாலை அதிபர் மூலம் சம்பந்தப்பட்ட கோட்டக் கல்விப் பிரதி கல்விப் பணிப்பாளர் ஊடாக யாழ் கல்வி வலயம் IIற்கு அனுப்பி வைக்கலாம் என கல்வி வலயம் Iன் பணிப்பாளர் இ. சிவானந்தன் தெரிவித்துள்ளார்.

இப்பதவிகளுக்கு விண்ணப்பிப்போரின் தகைமை தொடர்பான விபரங்களை உரிய பாடசாலை உள்ள கோட்டக் கல்வி அலுவலகங்களில் பார்வையிடலாம். 95

# வலி-மேற்கு நோக்கி மக்கள் இடம்பெயர்வு

(மானிப்பாய்)

கோண்டாவில், திருநெல்வேலி, கோப்பாய் பகுதியைச் சேர்ந்த மக்களில் அநேகம் பேர் வலி: மேற்குப்பகுதியை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர்.

படையினர் இப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் எறிகணை தாக்குதல் மற்றும் விமானத் தாக்குதல்களினுலும் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி ஆனைக்கோட்டை, நவாலி, சங்கரத்தை, வட்டுக்கோட்டைப் பகுதிகளில் தங்கியுள்ளனர்.

இதேவேளை வலி: மேற்குப் பகுதியில் முன்னேறிப் பாய்தல் நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்து கோண்டாவில் கோப்பாய் திருநெல்வேலிப் பகுதிகளில் தமது பொருட்களை எடுத்துச் சென்று பாதுகாப்பாக வைத்த வலி- மேற்குப் பகுதி மக்கள் அவற்றை தற்போது எடுத்துவர முடியாமல் இருப்பதாக கவலை தெரிவிக்கின்றனர். -71-சி

# வெளிச்சம்போதாமையால்படையினர் தமக்கிடையில் மோதிக்கொண்டனர்

(கொழும்பு)
வானிலும், லொறி ஒன்றிலும் ஆயுதங்களுடன் வந்த நபர்கள் முதலில் பாதுகாப்பு தளர்வாக இருந்த உறுகொடவத்த எண்ணெய்க் களஞ்சியத்தை நோக்கியே சென்றனர். அவர்களில் ஒரு பகுதியினர் வெடிகருவிகளை அங்கே இணைத்து வைக்கையில் மீதமானோர் கொலன்னாவை குதத்தை நோக்கி முன்னேறினர்.

அங்கே சுற்றி இடப்பட்டிருந்த பாதுகாப்புக் கம்பி வேலி மீது அவர்கள் ஏறிக்கொண்டிருக்கையில் காவலுக்கு நின்ற படைவீரர்களாலும் பொலிசாராலும் அவதானிக்கப்பட்டனர். உடனடியாக துப்பாக்கிச் சமர் ஆரம்பமானது. இதேவேளை வேறுபுறமாக இன்னொரு தொகுதி ஆயுததாரிகள் உள் நுழைந்து காவலுக்கு நின்றிருந்தோர் மீது தாக்குதல் தொடுத்தனர்.

இச்சமரை எதிர்கொள்ள முடியாத நிலையில் காவலுக்கென நின்றவர்கள் அவ்விடம் விட்டுத் தப்பியோடினர். இச்சந்தர்ப்பத்தில் கொலன்னாவை குதங்களிலும் வெடிகருவிகள் பொருத்தி வைக்கப்பட்டன.

அதிகாலை 2.05 மணிக்கு அவை வெடித்தன. இராணுவமும் விசேட அதிரடிப்படையும் அவ்விடம் நோக்கி விரைந்தனர். வெளிச்சம் போதாமையால் தமது 'சகா யார்' எதிரி யார் என்று தெளிவாக அடையாளம் காணமுடியாத நிலையில் தத்தளித்தனர். இதன் விளைவாக வெவ்வேறாகத் தனித்துநின்ற இராணுவமும் பொலிஸ் குழுவும் தவறுதலான துப்பாக்கிப் பிரயோகத்தில் நேரத்தை வீணடிக்க நேர்ந்தது.

பின்னர் இராணுவத்தின் வெடிகுண்டு செயலிழப்பு படை அங்கு வந்தது. துப்பாக்கி நபர்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு உடனடியாக இவர்கள் பலியாகினர். அவர்களின் பிக்கப் வண்டியும் பலத்த சேதமுற்றது.

அங்கு நின்ற தீயணைப்பு வீரர்கள் விலகியே நின்றனர். துப்பாக்கிச் சூட்டுக்கு பலியாகும் அபாயம் காரணமாக இரண்டு மணித்தியாலங்கள் கழித்து அங்கு வந்த விமானப் படையினரை துப்பாக்கி நபர்கள் என நினைத்து ஏனைய இராணுவத்தினரும் பொலிசாரும் சுட்டனர்.

இவ்வாறு நடத்தப்பட்ட தவறுதலான துப்பாக்கிப் பிரயோகம் ஒன்றிலேயே பி.பி.சி முகவர் ஜோர்ஜ் ஆர்னியும் கழுத்தில் காயமுற்றார்.
தி-சி

# தேசிய பாதுகாப்பு நிதி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட தேசிய பாதுகாப்பு நிதிக்கு இதுவரை ஒப்புதல் அளிக்காத அனைத்து மக்களையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9-00 மணி முதல் மாலை 3-00 மணி வரை இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறும் கலந்துரையாடலில் தவறாது சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கிராம சேவையாளர் பிரிவு வருமாறு:- உடுவில் மத்தி, வடக்கு, வடமத்தி, தென் கிழக்கு, தென்மேற்கு, சங்குவேலி, இணுவில் தென் மேற்கு, கிழக்கு, வடகிழக்கு, மேற்கு, தாவடி தெற்கு, கிழக்கு, வடக்கு சுன்னாகம் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, மத்தி, கந்தரோடை ஏழாலை மேற்கு, தென் மேற்கு, தெற்கு, கிழக்கு, வடக்கு, மத்தி புன்னாலைக்கட்டுவன் தெற்கு, வடக்கு ஈவினை, குப்பிளான் தெற்கு, வடக்கு. சி

## புலிகளுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தங்களை கீழே போடுவது தொடர்பான அடையாளத்தை வெளிப்படுத்தல் என்பனவே அந்த மூன்று நிபந்தனைகளுமாகும். சி

## இலங்கையில்

(1ம் பக்க தொடர்ச்சி)
சேர்ந்த 200க்கும் மேற்பட்டோர் நேற்றுக்காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை உண்ணாவிரதம் இருந்தனர்.

சென்னையில் நடைபெற்ற அந்த உண்ணாவிரதத்தில் இலங்கை அரசைக் கண்டிக்கும் பதாகைகளும் வைக்கப்பட்டிருந்தன. இந்த உண்ணாவிரதத்திற்கு பொதுமக்களும் பெரும் ஆதரவு வழங்கியுள்ளனர்.

உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. சி

## விடுதலைப்

(1ம் பக்க தொடர்ச்சி)
கிர மோதல் இடம் பெற்றது.

இதன்போது பலாலி முகாமிலிருந்து இப் பகுதி நோக்கி நூற்றுக் கணக்கில் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இம்மோதலின் போது விடுதலைப் புலிப் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர். வீரச்சாவடைந்த போராளிகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். க-சி

## இலங்கை

(1ம் பக்க தொடர்ச்சி)
இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட இரு தரப்பும் சம்மதம் தெரிவித்து அழைப்பு விடுத்தால் அமெரிக்கா இனப்பிரச்சினை தீர்வுக்கு மத்தியஸ்தம் வகிக்க தயாராக உள்ளதாக அறிவித்துள்ளதாகவும் 'ராவய' தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் அண்மையில் அமெரிக்காவில் இலங்கை வெளியுறவு அமைச்சரிடம் பிரான்ஸ், அமெரிக்க வெளியுறவு அமைச்சர்கள் இதுபற்றிய தங்கள் விருப்பத்தை தெரிவித்தபோது அவர் இதனை நாசூக்காக தட்டிக்கழித்ததும் தெரிந்ததே. ம சி

## தமிழீழம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
அடையாள உண்ணாவிரதம் ஒன்று நடைபெற்றது.

இது பற்றி நடிகர் மன்சூர் அலிகான் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் தெரிவிக்கையில்;

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் சிங்கள அரசினால் படுகொலை செய்யப்படுகின்றார்கள். இவ் விடயத்தில் இந்திய அரசு நடந்து கொள்வது எமக்கு மிகவும் மனவேதனையைத் தருகின்றது.

இலங்கையில் கடந்த 40வருடங்களாக விடுதலைப் போர் நடந்து கொண்டிருக்கின்றது. இதில் விடுதலைப் புலிகள் தமது உயிரை பணயம் வைத்து வெந்து மடிந்து கொண்டிருக்கின்றார்கள்.

உலகம் முழுவதும் நடைபெற்ற நடைபெறுகின்ற சுதந்திரப் போராட்டங்களை இந்திய அரசு ஆதரித்துள்ளது. கியூபாவில் நடைபெற்ற சேகுவேராப்போராட்டத்தையும், யசிர் அரபாத் இஸ்ரேலுக்கு எதிராக நடாத்திய போராட்டத்தையும் இந்திய அரசு ஆதரித்த போது, தமிழீழம் உருவாகுவதை மட்டும் இந்திய அரசு ஏன் விரும்பவில்லை. இது தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு நடவடிக்கை.

உலகிலுள்ள அனைத்து தமிழர்களும் தமிழீழம் கிடைக்க வேண்டும் என்று உறுதியாயிருக்கும் இவ்வேளையில், இந்தியா மட்டும் அது தமிழர்களுக்கு கிடைக்க கூடாதென்று கடந்த பல வருடங்களாகச் செயற்பட்டு வருகின்றது.

ஆகவே இந்திய மத்திய அரசு எக்காரணம் கொண்டும் இலங்கை அரசுக்கு உதவக் கூடாது. விடுதலைப் புலிகளை வெளிப்படையாக ஆதரிக்க வேண்டும். இது எனது தனிப்பட்ட கோரிக்கையல்ல, தமிழகத்திலுள்ள 9 கோடித்தமிழர்களுடைய மனஏக்கம். இதை மத்திய அரசு உணர்ந்துசெயல்படவேண்டும், இல்லாவிட்டால் அடுத்தமாதம் மிகப்பெரிய போராட்டமாக மத்திய அரசை எதிர்த்தும், இலங்கை, அமெரிக்க தூதரகங்களின் முன்பாக மறியல் போராட்டங்களையும் கண்டன ஊர்வலங்களையும் நடாத்த உள்ளோம் என்றார். வி-சி

# வடக்கு-கிழக்கில் மட்டுமன்றி கொழும்பிலும் இன்றுமோசமான நிலை

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தநிலை போன்று கொழும்பும் அபாயமான நிலையை எதிர்கொள்வதாக ஐ.தே.கவின் பொதுச் செயலர் திரு. காமினி அத்துக்கோறள தெரிவித்துள்ளார்,

அவர் மேலும் கூறுகையில்: அண்மையில் கொழும்பில் ஈ.பி.டி.பி. தலைவரைக் கொலைத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. அதை விட கொலன்னாவ உறுகொடவத்த எண்ணெய் குதங்கள் தகர்க்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்பும் கொழும்பில் பல குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்றபோதும் நேரடி மோதல் எதுவும் நடைபெறவில்லை. ஆனால் தற்போது நேரடிமோதலே நடைபெறும் அளவுக்கு நிலைமை வந்துள்ளது.

பாதுகாப்பின்மையே இதற்குக் காரணமாகும் வடக்கு-கிழக்கில் மட்டுமல்ல கொழும்பிலும் தற்போது மோசமான சூழ்நிலை தோன்றியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். -சி

# போர் விமானங்களுக்கு மட்டுமே தற்போது எரிபொருள் விநியோகம்

(கொழும்பு)
எண்ணெய் குதங்களில் தற்போதுள்ள விமானத்திற்கான எரிபொருள், விமானப்படை விமானங்களுக்கு மட்டுமே விநியோகிக்கப்பட்டு வருகிறது.

எண்ணெய் குதங்கள் தகர்க்கப்பட்டவுடன் இதற்கான கட்டுப்பாட்டை அமைச்சர் அனுருத்த ரத்வத்தை அமுல்படுத்தினார்.

யாழ். குடாவில் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைக்காக விமானப் படையினருக்கு அதிகளவு எரிபொருள் பயன்பாடு உள்ளதால், விமானப் படை தவிர்ந்த எந்த விமானங்களுக்கும் எரிபொருள் வழங்கப்படக்கூடாதென அவசரக் கட்டுப்பாடு அமுலுக்கு வந்தது.

இதனால் பல உள்ளூர் விமானச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சி

# என்னைச் சுற்றிவளைத்த படையினர் கண்டபடி சுடத் தொடங்கினர்

## - ஜோர்ஜ் ஆர்னி கூறுகிறார்

(கொழும்பு)
25ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் என்னை சுற்றிவளைத்த நிலையில் கண்டபடி சுடத்தொடங்கினர். அப்போது என்னைநோக்கி இலக்கு வைத்த படைவீரர் ஒருவரிடம் நான் பி.பி.சி. நிருபர் எனக் கத்திய போது ஒரு ரவை எனது தொண்டையை கிழித்துக் கொண்டு சென்றது.

இவ்வாறு கொலன்னாவை எண்ணெய்க்குதம் தகர்க்கப்பட்டபோது உடனடியாக அவ்விடத்திற்கு விரைந்து அங்கு வைத்து படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் படுகாயமடைந்த பி.பி.சி நிருபர் ஜோர்ஜ் ஆர்னி கொழும்பு ஆஸ்பத்திரியிலிருந்து சண்டே லீடருக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: நான் உண்மையிலே மிகவும் அதிஷ்டமுள்ளவன். இல்லாவிடில் நான் உயிர்தப்பியிருக்க முடியாது தாக்குதல் நடந்த இடத்திற்கு உடனடியாக விரைந்தபோது மக்கள் ஓடிக்கொண்டிருந்தனர். கார்கள் பெற்றோல் நிலையங்களுக்கு வெளியே அணிவகுத்து நின்றன.

சம்பவம் நடந்த கொலன்னாவ உறுகொடவத்த பகுதியை பொலிஸார் சுற்றிவளைத்தனர். அவ்விடத்திற்கு படையினர் உடனடியாக விரைந்து அங்கிருக்கும் துப்பாக்கி நபர்களை வெளியேற்றுவர் எனக் கூறினர். குண்டு வெடிப்பில் துப்பாக்கி நபர்கள் கொல்லப்படாவிடில் அவர்கள் உள்ளேயிருப்பார்கள் எனக் கருதினேன்.

தற்போது கழுத்தினுள்ளே சன்னத் துண்டொன்று உள்ளதாகவும் அது எக்ஸ்றே படப்பிடிப்பு மூலம் இனம் காணப்பட்டு சந்திர சிகிச்சை மூலம் அகற்றப் படவேண்டுமெனவும் டாக்டர்கள் கூறியுள்ளனர். சன்னத் துண்டு சிறிது தள்ளி சுவாசக் குழாயில் பிடித்திருந்தால் உயிர் தப்பியிருக்க முடியாது.

தனக்கு காயம் பட்டது குறித்து பி.பி.சியில் ஒலி பரப்ப வேண்டாமென்றும் அப்படி ஒலி பரப்பினால் அதனை பிரிட்டனிலுள்ள தனது தாயார் கேட்டு அச்சமடைவார் என்பதற்காகவே பி.பி.சி தனது காயம் பற்றி கூறவில்லை எனவும் கூறினர். சி

# சந்திரிகா வெளிநாடு சென்றமை நாட்டிற்கே அவமானமாகும்

## அநுரா கண்டனம்

(கொழும்பு)
கொலன்னாவை, உறுகொடவத்த எண்ணெய் குதங்கள் தகர்க்கப்பட்டது தெரிந்தும், ஜனாதிபதி சந்திரிகா வெளிநாடு பயணமானது நாட்டிற்குப் பெரும் அவமானத்தை ஏற்படுத்தியுள்ளதாக திரு. அநுரா பண்டாரநாயக்கா குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: நாங்கள் பெரியதொரு தேசிய ஆபத்தை எதிர்நோக்கி உள்ள இவ்வேளையில், நாட்டின் தலைவர் இங்கிருப்பதை விடுத்து வெளிநாடு சென்றுள்ளார். பொறுப்பு வாய்ந்த ஒரு தலைவர் என்றால் இப்படியானதொரு நிலையில் தனது பயணத்தை ரத்துச் செய்திருப்பார்.

திருமதி சந்திரிகாவின் நடவடிக்கை நாட்டிற்கு அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர் முப்படைகளினதும் தலைவர் என்பதையும் உணர வேண்டும். எனினும் பிரதமர் சிறிமா தனது வயதான நிலையையும் பாராது செயற்பட்டவிதம் பாராட்டத்தக்கது எனவும் கூறியுள்ளார். சி

மரமே உன்னடி நிழல் - என்
மன நிம்மதி

# விமானநிலையத்திற்கு குண்டுவைக்கமுயற்சி
# கொழும்பில் ஐந்து தமிழர் கைது

(கொழும்பு)

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு குண்டு வைக்க திட்டமிட்டதாக கூறி ஐந்து தமிழ் இளைஞர்களை நீர்கொழும்பு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர்கள் வெள்ள வீடிய பெரேரா பிளேஸில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். புலிகளின் புவேந்திரன் (வயது 30) அராலி, விஜயகுமார் (வயது 31) நுவரெலியா, எஸ் சின்னத்தம்பி [வயது 30] இரட்ணசிங்கம் இரட்ண சேகரன் (வயது 30] யாழ்ப்பாணம், ஜெயசந்திரன் [வயது 30] நுவரெலியா ஆகிய ஐவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளைச் சேர்ந்தவர்களெனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் 1993ம் ஆண்டிலிருந்து கொழும்பில் நிதிசேகரிப்பு வேலையில் ஈடுபட்டிருந்தனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சி

# நேற்று முழு நாளும் அகோர ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் நேற்று முழுநாளும் மக்கள் குடியிருப்பு பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

நேற்று ஒன்பதாவது நாளாக இராணுவத்தினர் காலையில் இருந்து விட்டு விட்டும் தொடர்ச்சியாகவும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இச் ஷெல்களில் பல கோப்பாய் பாலத்தடியில் வீழ்ந்து வெடித்துள்ளன. இதனைவிட நீர்வேலி, இருபாலை, உரும்பிராய், கோப்பாய், அளவெட்டி போன்ற பகுதிகளிலும் பெருமளவு ஷெல்கள் சரமாரியாக வீழ்ந்து வெடித்துள்ளன.

நேற்றைய ஷெல் தாக்குதலினால் குடாநாடே அதிர்ந்த வண்ணம் இருந்தது. எனினும் இத் தாக்குதல்களால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. 170-சி

# கிழக்கில் பல பகுதிகளிலும் புலிகளால் படையினருக்கு நெருக்கடி

(மட்டக்களப்பு)

கிழக்கின் பல பகுதிகளிலும் விடுதலைப் புலிகள் இராணுவத்தினருக்கு பெரும் நெருக்கடிகளை கொடுத்து வருவதாக 'சண்டேரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் பல பகுதிகளிலும்படையினருக்கு புலிகள் பலத்த நெருக்கடிகளை கொடுத்து வருகிறார்கள்.

குறிப்பாக விஷேட அதிரடிப் படையினருக்கு விடுதலைப் புலிகள் பல்வேறு தொந்தரவுகளை கொடுத்து வருகிறார்களாம். இதேவேளை கிழக்கில் கடற்புலிகளின் நடவடிக்கையும் அதிகரித்து வருகிறதாம்.

தற்போது வடக்கு- கிழக்கு -கொழும்பில் ஒரே நேரத்தில் புலிகள் படையினருக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி

## சூழல் பாதுகாப்பு கொடி வாரமும் மர நடுகையும்

[யாழ்ப்பாணம்]

தமிழீழ விடுதலைப் போர் முனைப்படைந்து வரும் வேளையிலும், தமிழீழச் சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கையாக சூழல் பாதுகாப்புக் கொடி வாரமும், மரநடுகையும் மேற்கொள்ளப்படுகின்றது.

இன்று 26ந் திகதி தொடக்கம் நவம்பர் 01ந் திகதிவரை தமிழீழம் எங்கும் மரநடுகைக்கான கொடிவாரமாகப் பிரகடனப் படுத்தி மக்களுக்கு கொடி விநியோகம் செய்வதோடு, மர நடுகை செய்யவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மழைகாலம் ஆரம்பித்துள்ள காரணத்தினால் சூழலைப் பாதுகாக்கும் மரங்களை நடுகை செய்வதோடு, கொடிகளைப் பெற்று ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்புப் பகுதி கேட்டுள்ளது. சி

## சமாதானத்தை அணுகுவது இலகுவான காரியமல்ல

(வாஷிங்டன்)

"சமாதானம் ஒரு விலை மதிக்கமுடியாத பொருள். பெறுமதி வாய்ந்த உயிர்கள், அரசியல்வாழ்வில் உறுதியற்ற தன்மையைக்கொண்டு சமாதானத்தின் பெறுமதியை மதிப்பிடமுடியும்".

இவ்வாறு இலங்கை ஜனாதிபதி திருமதி சந்திரிகா அமெரிக்காவில் வெளிநாட்டு உறவுகள் சபையில் உரையாற்றுகையில் கூறினர். ஜனாதிபதி இங்கு மேலும் உரையாற்றுகையில்:

பேச்சுவார்த்தை மூலம்சமாதானத்தை அணுகுவது ஒரு இலகுவான காரியமல்ல அரசாங்கம் முன்வைத்த சமாதான யோசனைகளை அனைத்து மக்களும் ஏற்றுக் கொண்ட போதிலும் விடுதலைப்புலிகள் அதற்கு இடையூறாக இருந்தார்கள். அதனாலேயே இன்றைய மோதல்நிலை உருவானது.

1983ம் வருடம் யூலை கலவரங்கள் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள மக்கள் மேற்கொண்ட ஒரு செயலல்ல. இது குறிப்பிட்டபட்ட ஒருசில காடையர் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் நோக்குடைய சம்பவமாகும்.

எமது அரசாங்கம் பதவிக்கு வந்த பின்பு இலங்கையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. மனித உரிமை நிலைமைகள் பெருமளவில் அபிவிருத்தி அடைந்துள்ளதென்றும் கூறினர். வி-சி

## ஷெல் தாக்குதல்

(பண்டத்தரிப்பு)

அளவெட்டியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று காலை 7-30 மணியளவில் மக்கள் குடியிருப்புகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய், சங்குவேலி வயல் வெளிப் பகுதியில் ஐந்துக்கு மேற்பட்ட ஷெல்கள் விழுந்து வெடித்தன. இதனால் பதற்றமடைந்த அப்பகுதி மக்கள் தூர இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்று பின்னர் மீண்டும் தங்கள் இடங்களுக்குத் திரும்பினர். 72-சி

## தமிழ் ஆசிரியர் கண்டியில் கைது

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் எனக்கூறி தமிழ் ஆசிரியர் ஒருவர் கண்டியில் வைத்து பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இவ் ஆசிரியர் கைதுசெய்யப்பட்டுள்ளாராம். க-சி

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் லோறன்ஸ்
### [பிள்ளைக்குட்டி]

மண்டைதீவை பிறப்பிடமாகவும் தற்போது ஆனைக்கோட்டையில் வசித்தவருமான திருமதி பாக்கியம் லோறன்ஸ் [பிள்ளைக்குட்டி] 24 10 95 அன்று காலமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற சலமோன் லோறன்ஸ்சின் அன்பு மனைவியும், திரேசம்மா, ஜோசு, காலஞ்சென்ற றோசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அலெக்சாண்டர் [கொழும்பு], யோசேப் [A J M. புடவையக உரிமையாளர்], மரியதாஸ் [இத்தாலி], உத்தமசீலி, ஞானசீலி, ஜெயசீலி [ஜேர்மனி], அமலசீலி [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தாயாரும், அந்தோனி பர்ணந்து [பிரான்ஸ்], ஜோச்[ஜேர்மனி] சேகர் [ஜேர்மனி] காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை பிறேமா [கொழும்பு], அருள் மேரி, மேரிறோஸ் [இத்தாலி] ஆகியோரின் அன்பு மாமியாரும், நியூட்டன், நிக்சன், நிருபன், நிசாந், லக்சனு, கம்சனு, மேருஜா, மரியஸ்ரெலா, பிறின்டன், அகிரன், அஞ்சனு, அனக்கன், அனக்சியா, அனுசியா, றூபன், றூபிகா, றூபின்சன், றூபினு ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் 25-10-95 [நேற்று] பிற்பகல் 3 00 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து ஆனைக்கோட்டை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வமாணிக்கம் (யோசேப்)
[மகன்]
A. J. M. புடவையகம்
சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

விலாசம்:
யாவிக் லேன்,
ஆனைக்கோட்டை.
[சி 1718]

## யாழ்: மீதான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக முன்னர் செய்திகள் வெளிவந்தபோதும் தற்போது 21 000 படையினரே இத் தாக்குதலில் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை யாழ். குடா மீதான தாக்குதல் அடுத்த சில தினங்களில் ஆரம்பிக்கப் படுமெனவும் இதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டு விட்டதாகவும் படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. க-சி

## இராணுவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிடப்பட்டுள்ளது. வலி கிழக்கில் கடந்த ஒரு மாதமாக தொடரும் இராணுவ நடவடிக்கையாலேயே இவ்வளவு மக்களும் இடம் பெயர்ந்துள்ளனர்.

பொதுமக்களுக்கெதிராக படையினர் மேற்கொண்டு வரும் விமான, ஷெல் தாக்குதலுக்கு அஞ்சியே மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

இது குறித்து சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்கள் வெளியுலகிற்கு தெரிவித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. க-சி

## வாகனங்கள் மீது கொழும்பில் கடும் சோதனை

(கொழும்பு)

கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கும் சகல வாகனங்களும் அங்கிருந்து வெளியே செல்லும் வாகனங்களும் முப்படையினரதும் நுணுக்கமான சோதனைக்குள் வாக்கப்பட்டு வருகின்றன.

சந்தேகத்திற்கிடமான சகல வாகனங்களும் தடுத்து நிறுத்தப்பட்டு தீவிர பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன

இதேவேளை பொலிஸாரினால் இரவு- பகல் ரோந்து சேவையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. முக்கிய பாலங்கள் மற்றும் வீதிகளில் இராணுவத்தினர் புதிதாக காவல் நிலைகளை அமைத்து சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ் விடயத்தில் பொது மக்களின் உதவியும் கோரப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கும் தகவல்களுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். க-

## போலியோ தடுப்பு மருந்து யாழ். வந்து சேர்ந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் எதிர் வரும் நவம்பர் மாதம் நான்காம் திகதி அனுஷ்டிக்கப்படும் போலியோ தடுப்பு தினத்திற்கான போலியோ தடுப்பு மருந்துகள் அனைத்தும் வந்து சேர்ந்துள்ளன.

சுமார் இரண்டு லட்சத்து இருபதினாயிரத்து இருநூற்று பத்து டோஸ் போலியோ தடுப்பு மருந்துகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இத் தடுப்பு மருந்துகள் யாழ். போதனா வைத்திய சாலையில் குளிரூட்டிகளில் பாதுகாக்கப்பட்டு வருவதாக யாழ். சுகாதார திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் நான்காம் திகதியும், டிசம்பர் மாதம் ஒன்பதாம் திகதியும் யாழ் மாவட்டத்தில் போலியோ தடுப்பு தினமாக அனுஷ்டிக்கப்படும்

ஐந்து வயதிற்கு உட்பட்ட சுமார் ஒரு இலட்சத்து எண்பதினாயிரம் குழந்தைகளுக்கு இப் போலியோ தடுப்பு மருந்து போடப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. 170-சி

## வெளிநாடுகளில் எண்ணை நிரப்பிவருமாறு விமானநிறுவனங்களுக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

கொழும்பு வரமுன்னர் வெளிநாடுகளில் எண்ணை நிரப்பி வருமாறு வெளிநாட்டு விமான நிறுவனங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

எண்ணெய்க் குதங்கள் மீதான தாக்குதல்களையடுத்தே சகல வெளிநாட்டு விமானங்களும் இவ்வாறு கோரப்பட்டுள்ளன.

மேலும் கட்டுநாயக்கா பண்டாரநாயக்கா விமான நிலைய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதால் பயணிகளை 3 மணிநேரம் முன்கூட்டியே விமான நிலையத்திற்கு வருமாறும் கூறப்பட்டுள்ளது.

பயணிகள் மீதான சோதனைகள் பல இடங்களில் மிகத் தீவிரமாக நடப்பதால் முன்கூட்டியே வருமாறு பயணிகள் கோரப்பட்டுள்ளதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. -சி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618.